[2011 செப்டம்பர் 14

## 13. இலங்கைத் தமிழர்கள் தாயகம் திரும்புதல்

*தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் முகாம்களிலிருந்து, தாயகத்திற்கு திரும்பிச் செல்ல விரும்பும் அகதிகள் தங்களது சொந்த செலவில் அல்லது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதர் (UNHCR) உதவியுடன் வெளி செல்ல அரசு அனுமதி வழங்குகிறது. 31-8-2011 வரை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதர் (UNHCR) உதவியுடன் 9,766 நபர்கள் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.*

## 14. தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு

*இந்திய குடியுரிமைப் பெற்ற தமிழ் வம்சாவளியினைச் சார்ந்த 1,46,500 நபர்கள் இதர நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியுள்ளனர். தாயகம் திரும்பியவர்களுக்கு மறுவாழ்வு உதவிகள் மற்றும் தேயிலை, இரப்பர், சிங்கோனா தோட்டங்களிலும், கூட்டுறவு நூற்பாலைகள், ரெப்கோ வங்கியின் தொழிற் திட்டங்கள் ஆகியவற்றில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.*

*தாயகம் திரும்பியவர்களுக்கு ரெப்கோ வங்கிமூலமாக அளிக்கப்பட்ட நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:*

| வ. எண் | ஆண்டு | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 2010-2011-ம் ஆண்டு | 92.36 |
| 2. | 2011-2012-ம் ஆண்டு (15-08-2011 முடிய) | 1.10 |

## II முன்னாள் படைவீரர் நலன்

*போர்முனையில் உயிர்த் தியாகம் செய்த தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் குடும்பத்தார், உடல் ஊனமுற்ற படைவீரரின் மறுவாழ்வு மற்றும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் படைவீரர் குடும்பத்தாரின் நலனைப் பேணிக் காப்பது முன்னாள் படைவீரர் நலத் துறையின் முக்கியப் பொறுப்புகளாகும். அனைத்து நலத் திட்டப் பணிகளும் 25 மாவட்ட அலுவலகங்கள்மூலம் நிறைவேற்றப்படுகின்றன.*

2011 செப்டம்பர் 14]

*31-8-2011 அன்றைய நிலவரப்படி 2,17,764 முன்னாள் படைவீரர்கள் மற்றும் உயிர் நீத்த படைவீரர்களின் கைம்பெண்கள் இத்துறையில் பதிவு செய்துள்ளனர்.*

*முன்னாள் படைவீரர் நலனுக்காக இத்துறையால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் பின்வருமாறு:*

*1. மறு வேலைவாய்ப்பு அளித்தல் முன்னாள் படைவீரர்களுக்கு மறு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் பணி முன்னாள் படைவீரர் நலத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநில அரசுப் பணிகளில் பின்வருமாறு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது:*

| | | |
|---|---|---|
| 1. | பிரிவு சி காலியிடங்கள் | 5% |
| 2. | அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் காலியிடங்கள் | 10% |
| 3. | வனக் காவலர் பணியிடங்கள் | 10% |
| 4. | வனப் பாதுகாவலர் பணியிடங்கள் | 5% |
| 5. | தேசிய மாணவர் படை அலுவலகங்களில் லஸ்கர், ஓட்டுநர் மற்றும் இரவு காவலர்கள் பணியிடங்கள் | 25% |
| 6. | சீருடைப் பணிப் பிரிவில் பிரிவு சி காலியிடங்கள் | 5% |

*இது நாள் வரை 433 முன்னாள் படைவீரர்கள், அரசுத் துறை மற்றும் இதர நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர்.*

**2. சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்**

*முப்படையிலிருந்து ஓய்வு பெற்ற அனைத்து முன்னாள் படைவீரர்களுக்கும் அரசு வேலைவாய்ப்பு பெற்று வழங்குதல் இயலாது என்பதால், அவர்தம் இருப்பிடத்திற்கு அருகிலேயே பணியமர்த்தும் குறிக்கோளுடன் முன்னாள் படைவீரர்களை சுய வேலைவாய்ப்பு துவங்குவதை ஊக்கப்படுத்தி, அவர்களது*